**மாகாண கல்வித் திணைக்களம்**
**வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்**

**தரம்:**
**க.பொ.த சா.தாரம்**

**பாடம்:**
**தமிழ்மொழியும் இலக்கியமும்**

**September**
**2ஆம் வாரம்**

**பாடஅலகு**
**தத்தைவிடு தூது 5-9 வரையான பாடல்கள்**

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

- **மாணவர் செயற்பாடு**

1. இலக்கியத்தொகுப்பு பாடப்புத்தகத்தில் இடம்பெறும் தத்தைவிடு தூது என்ற பாடத்தில் இடம்பெறும் 5 முதல் 9ஆம் பாடல் வரையான ஐந்து பாடல்களையும் நன்கு வாசித்து அப்பாடல்களை சந்திபிரித்தெழுதுங்கள்
2. நீங்கள் சந்திபிரித்த பாடல்களில் கொண்டுகூட்டி எழுதப்படவேண்டிய பாடல்கள் இருப்பின் அதனை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுங்கள்
3. அவற்றின் அரும்பதங்களை இனங்கண்டு பொருளை எழுதுங்கள்.

- **இந்தப்பாடப்பரப்பு தொடர்பாக உதவிபெறவேண்டிய இணையத்தளங்கள்**

1. E-Thakshalawa – தூது, தத்தை விடுதூது, 1-4பாடல்கள்
https://youtu.be/fhujourTWCk
2. E-Thakshalawa – தத்தைவிடு தூது 5-14 பாடல்கள்
https://youtu.be/B2-ilIHJyjo
3. Tamilauthors
https://www.tamilauthors.com/01/201.html
4. kilakkuman
http://kizkkuman.blogspot.com/2010/08/blog-post_921.html

- **இந்தப்பாடத்தின் மூலம் பெறும் கற்றல்பேறுகள்**

1. தூதுப்பிரபந்தம் பற்றி அறிந்து எழுதுவார்
2. இலக்கியங்கள் ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் கோலங்களை பிரதிபலிக்கின்றன என்பதை உணர்ந்துகொள்வார்.
3. குறித்த காலத்தில் எழுந்த இலக்கியங்களின் ஊடாக அக்கால சமூக பண்பாட்டு நிலைகளை அறிந்து எழுதுவார்
4. அக்காலத்தில் நிலவிய பெண்ணியல் சார்ந்த சிந்தனைகளை பட்டியலிடுவார்
5. தரப்படுகின்ற பாடல்களை வாசித்து அது தொடர்பாக வினவப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்வார்.

- **மதிப்பீட்டு முறைகள்**

1. தத்தைவிடுதூது என்ற பாடப்பரப்பின் 1ஆம் பாடல் முதல் 9ஆம் பாடல் வரையான பாடல்களை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக
    1. அப்பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்ற அக்கால பெண்களின் நிலை பற்றி குறிப்பிடுக
    2. தனது தலைவியின் அழகினை தலைவன் எவ்வாறெல்லாம் எடுத்துரைக்கின்றான்?
    3. தலைவியின் மீது தலைவன் கொண்ட அன்பு எவ்விதம் எடுத்துரைக்கப்படுகின்றது?
    4. கிளி வாழுகின்ற சூழல் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?